செ.வெ.எண்: 50 நாள்: 27.02.2021

## கரூர் மாவட்டம்

**தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்து விளக்கும் வகையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான விளக்கக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திருமதி சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்து அங்கீகரிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரிதிநிதிகளுக்கு விளக்கும் வகையிலான கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திருமதி சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சி.சோ.மகேஸ்வரன் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (27.02.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை பொதுத்தேர்தல் 2021 நடைபெறுவதற்கான தேதி அறிவிக்கப்பட்டதையடுத்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப்பேரவைக்கான பொதுத்தேர்தலை நடத்துவதற்கான கால அட்டவணை இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வேட்புமனுத்தாக்கல் 12.03.2021 அன்று துவங்குகின்றது. வேட்புமனுத்தாக்கல் செய்ய கடைசி நாள் 19.03.2021 ஆகும். 20.03.2021 அன்று வேட்புமனு பரிசீலனை செய்யப்படும். வேட்புமனுவை திருப்பப்பெறும் நாள் 22.03.2021. வேட்பாளர்கள் இறுதிப்பட்டியல் வெளியிடும் நாள் 22.03.2021. சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் நாள் 22.03.2021. தேர்தல் நடைபெறும் நாள் 06.04.2021 ஆகும். வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் 02.05.2021.

தேர்தல் ஆணைய உத்தரவின்படி கரூர் மாவட்டத்தில் அந்ததந்த சட்டமன்ற தொகுதியிலேயே தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அலுவலகம் அமைக்கப்பட்டு வேட்புமனுக்கள் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் நாளன்று காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் தொடர்பான அனைத்து நிகழ்வுகளும் உரிய வழிகாட்டி நெறிமுறைகளின்படி கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்குட்பட்டு நடத்தப்படவேண்டும்.

கரூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளில் மொத்தம் 1,032 முதன்மை வாக்குச் சாவடி மையங்களும், 1,050 வாக்குகளுக்கு மேல் உள்ள வாக்குச்சாவடிகளை பிரித்து புதிதாக தேற்றுவிக்கப்பட்ட 242 துணை வாக்குச் சாவடி மையமும், என ஆக மொத்தம் 1,274 வாக்குச் சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மொத்தம் 18 பறக்கும் படை குழுக்களும், 18 நிலையான கண்காணிப்புக்குழுக்களும், 4 வீடியோ கண்காணிப்புக் குழுக்களும் மற்றும் நான்கு கணக்கீட்டுக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் 134-அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் 6 பறக்கும்படை குழுக்கள் (Flying Squard Team), 6 நிலையாக நின்று ஆய்வு செய்யும் (Static Surveillance Team ) குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது. 135- கரூர் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணிக்காக 6 பறக்கும்படை குழுக்ளும், 6 நிலையாக நின்று ஆய்வு செய்யும் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது.

136, கிருஷ்ணராயபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் 3 பறக்கும்படை குழுக்களும், 3 நிலையாக நின்று ஆய்வு செய்யும் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது.

137- குளித்தலை சட்டமன்ற தொகுதியில் 3 பறக்கும்படை குழுக்களும், 3 நிலையாக நின்று ஆய்வு செய்யும் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நான்கு தொகுதிகளுக்கும் தலா ஒரு வீடியோ கண்காணிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக்குழுக்களில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய வகையில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் உள்ளதால் அரசியல் கட்சிகள் தொடர்பாக வைக்கப்பட்டுள்ள பதாகைகள், சுவர் விளம்பரங்கள், கொடிக்கம்பங்கள் 24 மணி நேரத்திற்குள் அகற்றப்பட வேண்டும் என்று சம்மந்தப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அகற்றப்படாத பட்சத்தில் அலுவலர்கள் மூலமாக அகற்றப்பட்டு அதற்கான செலவினத்தொகை கணக்கிடப்படும்.

அரசியல் கட்சியினைச் சார்ந்த இறந்துபோன தலைவர்களின் சிலைகளை மறைத்திடத் தேவையில்லை, ஆனால் அவர்களின் சிலைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சியின் சின்னங்கள் மற்றும் கல்வெட்டுகளை கட்டாயம் மறைக்க வேண்டும். தேர்தல் தொடர்பான அரசியல் கட்சிகளின் ஊர்வலங்களில் தேசியக்கொடியினை பயன்படுத்த அனுமதி இல்லை.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 80 வயதிற்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு தபால் வாக்கு அளிக்கும் வசதி ஏற்படுத்தப்படும். கரூர் மாவட்டத்தைப்பொறுத்தவரை 80 வயதிற்கு மேற்பட்டவர்களாக 17,724 நபர்களும், மாற்றுத்திறனாளிகளாக 6,503 நபர்களும் கண்டறியப்பட்டுள்ளனர்.

தனியார் வாகனங்களில் வாக்காளர்களை கவரும் வகையில் கட்சிக்கொடி, தலைவர்களின் படங்கள் வைத்துக்கொள்ள அனுமதியில்லை. மாவட்ட தேர்தல் அலுவலரிடம் உரிய அனுமதி பெறாத வணிக நோக்கிலான வாகனங்களில் கொடிகள், ஸ்டிக்கர்கள் ஒட்டி விளம்பரம் செய்யக்கூடாது. வாகனத்தின் வெளிப்புற அமைப்பை மாற்றுதல், ஒலிபெருக்கிகள் அமைத்தல் ஆகியன மோட்டார் வாகனச் சட்டத்திற்குட்பட்டு இருக்க வேண்டும். தேர்தல் தொடர்பான புகார்களை 24 மணி நேர தகவல் மையத்திற்கு 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடர்பான தகவல்கள் உங்கள் அனைவரிடமும் வழங்கப்பட்டுள்ளது. நேர்மையான, அமைதியான, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய தேர்தலை நடத்துவதற்கு அனைவரும் தங்களின் முழு ஒத்துழைப்பினை அளிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து அரசுத்துறை அலுவலர்களுக்கான கூட்டமும், பறக்கும்படை, நிலையாக நின்று ஆய்வு செய்யும் குழு, தேர்தல் பிரச்சாரங்களை வீடியோ எடுக்கும் குழுக்களுக்கான பயிற்சிக் கூட்டமும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கரூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் கரூர் வருவாய் கோட்டாச்சியர் திரு. என்.எஸ்.பாலசுப்பிரமணியன், குளித்தலை சட்டமன்ற தொகுதி தோதல் நடத்தும் அலுவலா் மற்றும் சாா் ஆட்சியா் திரு.ஷே.ஷேக்அப்துல்ரக்மான்,இஆப., அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி தோதல் நடத்தும் அலுவலா் மற்றும் கலால் துறை உதவி ஆணையா் திரு.ஜி.தவச்செல்வம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி தோதல் நடத்தும் அலுவலா் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலா் திரு.கே.தட்சிணாமூா்த்தி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பலா் கலந்து கொண்டாா்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**